# 9 தென்பகுதி மீனவர்களை புலிகள் விடுவித்தனர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பாது காப்பில் இருந்த தென் பகுதி மீனவர்கள் ஒன்பது பேர் மனிதாபிமான அடிப் படையில் நேற்று காலை விடு தலை செய்யப்பட்டு சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத் தினரிடம் ஒப்படைக்கப்பட் டனர்.

சுண்டுக்குழியில் உள்ளகடற் புலிகளின் பிரதேச காரியா லயத்தில் இந்த நிகழ்வுநேற்று நடைபெற்றது. 9 மீனவர் களையும் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப் பாளர் திரு. கரிகாலன்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 02 இதழ் 257
யாழ்ப்பாணம் புதன்கிழமை 19-10-1994

## புலிகள் எம்மை நன்கு பராமரித்தார்கள்

— விடுவிக்கப்பட்டவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் எம்மை மிக நன்கு பராமரித்தனர். எமக்கு எதுவித குறையு மின்றி கவனித்தனர். இதனை நாங்கள் ஒருபோதும் மறக்க மாட்டோம்.

இவ்வாறு நேற்று விடுதலை செய்யப்பட்ட நீர்கொழும் பைச்சேர்ந்த மீனவரான டபிள்யூ ஸ்ரான்லி தெரிவித் தார். அவர் மேலும் கூறு கையில்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ 2-ம் கட்டப் பேச்சுவார்த்தையில்

# அரச தரப்பில் கேணல் ரத்வத்த கலந்துகொள்வார் என தகவல்!

## எதிர்வரும் 24-ம் திகதி பேச்சு நடைபெறும்

[கொழும்பு]

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான இரண்டாம் கட்ட பேச்சு வார்த்தையில் அரசு தரப்பில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 24-ம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இந்தப் பேச்சு வார்த்தை நடைபெறும்.

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்துகொள்வார்கள் எனக் கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. வடபகுதி மக்களைப் பெரிதும் பாதித்துள்ள பொருளாதாரப் பிரச்னை உட்படப்

(4-ம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்கு முக்கியத்துவம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அர சுப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தைக்கு கொழும்புப் பத்திரிகைகள் முக்கிய இடம் கொடுத்துச் செய்திகளை வெளி யிட்டிருக்கின்றன.

வீரகேசரி, தினகரன்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தேர்தலுக்கு முன் சந்திரிகா - பிரபா சந்திப்பு?

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்திப்பார் என பி. பி. ஸி. தென்-கிழக்கு ஆசிய சேவை நேற்று தெரிவித்தது.

இதேவேளை எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இரண்டாம்

(4-ம் பக்கம் பார்க்க)

## பூஸா தடுப்பு முகாம் விரைவில் மூடப்படும்

(கொழும்பு)

பூஸா தடுப்பு முகாம் விரை வில் மூடப்படவுள்ளதாக அதன் ஆணையாளர் தெரிவித் துள்ளார்.

இங்குள்ள கைதிகளில் பெரும் பாலானோர் விடுதலை செய்யப் பட்டுவிட்டதாலேயே, பூஸா முகாம் மூடப்படவுள்ளது என்

(4-ம் பக்கம் பார்க்க)

## 'ஹேமா' இரகசியங்களை அம்பலப்படுத்துவேன்

— ரணசிங்கா அறிவிப்பு

(கொழும்பு)

ஹேமா பிரேமதாச பற்றிய பல இரகசியங்கள் என்னிடம் உள்ளன. நான் அந்த இர கசியங்கள் அடங்கிய பெட்ட கத்தைத் திறப்பதற்கு ஆயத்த நிலையில் உள்ளேன் என்று ஜனாதிபதி வேட்பாளர் ஏ.ஜே. ரணசிங்க, 'கிணிஹிர' பத்தி ரிகையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிப்ப தாவது: ஹேமா பிரேமதாச அரசியலிலிருந்து ஒதுங்கி இருந்ததால், அவர் பற்றி எந்த விடயத்தையும் நான் பகிரங்கப்படுத்தவில்லை. இப்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசு புலிகளை விடுவிப்பதாகக் கூறி 18 மீனவரையே விடுதலை செய்தது

— கரிகாலன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் 18 பேரை விடுவிப்பதாகக் கூறிய அரசு, அப்பாவி மீனவர்கள் 18 பேரையே விடுதலை செய்தது.

இவ்வாறு தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு.கே.கரிகாலன், தென் பகுதி மீனவர் 9 பேரை விடு தலை செய்து அவர்களைச் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத் திடம் ஒப்படைத்த பின்னர் உரையாற்றுகையில் தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் பேசு கையில்: பேச்சுவார்த்தைக்கு வந்த அரச பிரதிநிதிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

### கிளாலி—பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப் புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## கைதிகள் விடுதலைக்கு நடுநிலை வகிக்கிறோம்

— ஐ. சி. ஆர். சி. பிரதிநிதி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பெரிய பேச்சுக்களை நடாத்தும் ஒரு ஸ்தாபன மல்ல. நாம் நடுநிலையானவர் கள் என்பதினாலேயே இவ் வாறான சம்பவங்களிலும் கைதிகள் விடுதலை, கைதிகள் பரிமாற்றங்களிலும் நடுநிலை வகிக்கிறோம்

இவ்வாறு நேற்று விடுதலைப் புலிகள் ஒன்பது தென்பகுதி மீனவர்களை விடுதலை செய்து

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் சிங்கப்பூர் விஜயம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது

(கொழும்பு)

பிரதமர் சந்திரிகா பண் டாரநாயக்க குமாரதுங்க அண்மையில் சிங்கப்பூருக்கு மேற்கொண்ட விஜயம்பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ள துடன் பலவிதமான வதந்தி களையும் பரவவிட்டிருக்கிறது என பி. பி. ஸி. தெரிவித் தது.

தனிப்பட்டவிஜயம் ஒன்றை மேற்கொண்டே தான் சிங் கப்பூர் சென்றதாகவும் இதற் கென அரச நிதிஎதனையும்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தீபாவளி வாழ்த்து மடல்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள். தினேஷ் புத்தகசாலை, 19, பழைய பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(சி-1270)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி உடன் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள ஆஷா கோழிப்பண்ணை, 1-ம் கட்டை, பருத்தித்துறை.

(சி-1268)

### 11 - 11 - 94 குருச்சண்டாள

யோகம் நீக்கம்

சந்திரிகா ஜனாதிபதியாக அமோக வெற்றியும், 11 - 11 - 94 வியாழ, ராகு நீக்கமும் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தி யுத்தநிறுத்தத்தை அமுல்படுத்தும். சத்யா, கட்டுடை.

(சி-1273)

ஐ. தே. க. கூட்டங்களுக்கு

## ரணிலுக்கு அனுமதியில்லை

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலில்காமினி திசநாயக்காவின் பிரசாரக் கூட்டங்களுக்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சமூகமளிக்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது என்று 'லக்வீம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட அன்றுஹேமா பிரேமதாசா தலைமையில் இடம் பெற்ற ஐ. தே. க. பிரசாரக் கூட்டம் முதல் இன்று வரைக்கும் ஐ-தே. க. பிரசாரக் கூட்டங்களில் பங்கு பற்றுமாறு ரணில் விக்கிரமசிங்காவுக்கு எவ்வித அழைப்பும் விடுக்கப்படவில்லையாம்.

இதேவேளை ஜனாதிபதி தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்த தினத்தன்று சமூகமளிக்குமாறு ரணில் விக்கிரமசிங்காவுக்கு அழைப்பு விடுத்தும் அவர் அங்கு சமூகமளிக்கவில்லை யென்றும் 'லக்வீம" மேலும் தெரிவித்துள்ளது.

(ம-சி)

University of Jaffna
External Registration & Examination Unit.

**FIRST IN ARTS / FIRST IN COMMERCE ( EXTERNAL )**

**EXAMINATION — 1993**

( EX. E. S. L. 1.0 — English as a Second Language

The subject English as a Second Language ( EX. E. S. L. 1.0 ) for the First in Arts / **First in Commerce** Exteranal Examination 1993 will take plac on 25 - 10 - 94 — Tuesday from 9-00 a. m. to 12-00 Noon.

Please note the change of time.

(A-4434) **REGISTRAR.**

## கர்நாடக இசை அரங்கேற்றம்



''ஸ்வரராகலயவினோத சுரபி'' சங்கீத பூஷணம்
திரு. எல். திலகநாயகம் போல்
அவர்களின் மாணவன்
செல்வன் குணராசா நக்கீரன்

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
காலம்: 19-10-94
தலைவர்: திரு. இ. மகேந்திரன்
(அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி)
பாட்டு: செல்வன் குணராசா நக்கீரன்
வயலின்: இசைஞான பூபதி ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்: வித்துவான் சண்முகலிங்கம் நாகராஜன்
கெஞ்சிரா: வித்துவான் பிரம்மஸ்ரீ பாலச்சந்திரசர்மா
கடம்: வித்துவான் கணபதிப்பிள்ளை கஜன்
முகர்சிங்: வித்துவான் எஸ். ராஜா
தம்புரா: வித்துவான் எஸ். சண்முகலிங்கம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கொக்குவில் இந்துக் கல்லூரி

(ஏ-4435)

மனம் ஆயிரம் சொல்லுமே
மரம் ஆயிரம் கண்டால்

## ஆண்டு மூன்றிலும் ஆறுத நினைவு



திருமதி கமலாவதி பரராஜசேகரம்

தோற்றம் : 13 - 06 - 1956 சிவபதம் : 19 - 10 - 1991


திதி : ஐப்பசி பூர்வபக்க துவாதசி

கணவன் கு. பரராசசேகரம்,
பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.

கமலபதி,
தெய்வன்கேணி வீதி,
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

(சி-1272)

## 2ம் ஆண்டு நினைவுநாள்



அமரர் அருளம்பலம் அரசநாயகம்

தோற்றம் : 12 - 01 - 1930 மறைவு : 10 - 11 - 1992

திதி : 19 - 10 - 1994

திங்கள் முகம் பார்த்த குமுதமென
நின்றிருந்தேன்
பௌர்ணமி யினியில்லை அமாவாசை
யென்றிருந்தேன்
குங்குமத்தை அழித்துவிட்டு பூச்சூட
மறந்துவிட்டேன்
தங்களடி தொடர தனியவளாய்
வாடுகின்றேன்.

மனைவியுடன் குடும்பத்தினர்.

தேவாலய வீதி,
( முரளி வீதி ) சங்கானை.

(சி-1269)

### இன்று

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை கல்லூரி அதிபர் திரு. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் கலந்து கொள்கிறார்.

(55-சி)

## இராசி பலன்

19 - 10 - 1994

புதன்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி- 02)

பூரணை மாலை 6-05 வரை, ரேவதி பி. ப. 2-35 வரை, இராகுகாலம் ந.ப. 12-02 முதல் 1-32 வரை. சுபவேளை மாலை 4-32 முதல்5-02 வரை, பூரணைவிரதம்.

மேடம்: கண்கலங்குதல், குடும்பசஞ்சலம், அலைச்சல்.

இடபம்: தொழில் உறவு, காரிய வெற்றி, உயர் பதவி.

மிதுனம்: நினைத்தது நிறைவேறல், இனிய சந்திப்பு. பயணம்.

கடகம்: இனசனபகை, வேண்டாத பழி, குழப்பம்.

சிங்கம்: சகோதர வெறுப்பு, பாகப்பிரிவினை, கடன்படல்.

கன்னி: வயோதிபர் ஆசி, தொழில் லாபம், குதூகலம்.

துலாம்: சுபநிகழ்ச்சி, அன்னியர் சகாயம். பாராட்டு.

விருச்சிகம்: தர்க்கவாதம், தொழில் நஷ்டம், மனப்பயம்.

தனுசு: விரோத எண்ணம், மறைமுக சந்திப்பு, கவலை.

மகரம்: மனத்தெளிவு, பிரச்னைத் தீர்வு, விருந்துண்ணல்.

கும்பம்: மூர்க்கத்தனம், வீண்பழி, விவேகக்குறைவு.

மீனம்: வெகுமானம், தியாக சிந்தை, காரிய சித்தி.

—ஜோஸ்யர்

## இன்ரபோல் உதவியை லஞ்ச திணைக்களம் நாடுகிறது

(கொழும்பு)

முன்னாள் ரயில்வே திணைக்களத் தலைவர் டபிள்யூ ஏ. சே. சில்வாவை தேடிக்கண்டு பிடித்து நாட்டுக்கு கொண்டு வருவதற்காக லஞ்ச ஊழல் திணைக்களம் இன்ரபோல் பொலிஸின் உதவியை நாடியுள்ளது.

அவர்மீது லஞ்ச விசாரணை ஆரம்பமாக இருக்கும் வேளையில் தேர்தல் முடிந்த கையோடு அவர் இரகசியமாக நாட்டைவிட்டு தப்பியோடியதால் அந்த விசாரணையை தொடரமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக லஞ்ச திணைக்கள ஆணையாளர் திருமதி நெலும் சுமசே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; முன்னைய அரசின் சபாநாயகர்,நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க அனுமதி தராததால் பல ஊழல்கள் விசாரிக்க முடியாமல் போயிற்று, தற்போதைய சபாநாயகர் அனுமதி தந்திருப்பதால் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஏதுவாகஉள்ளது.

அரசுக்கு பாரிய நஷ்டம் ஏற்படும் வகையில், முன்னர் அரச காணிகள் குறைந்த மதிப்பீட்டோடு விற்கப்பட்டன. சட்டத்தில் அப்போது வலு இல்லாததினால் இவைகள் சுலபமாக நடந்துள்ளன. வரவுள்ள புதிய சட்டமூலம், இப்படியான தவறான நடவடிக்கைகளை கட்டுப்படுத்த பெரும்உதவி புரியும் என்றார்.

(சே-சி)

**மணிவாக்கு**

எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும் அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை கைவிடக்கூடாது.

திருவள்ளுவர்

# சமாதான பேச்சுக்கள் பற்றி ஜனதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை

## பிழை என்கிறது ஜனதிபதி அலுவலகம்

[கொழும்பு]

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக அரசுப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம்சென்று திரும்பியது பற்றியோ, பேச்சுவார்த்தைகள் என்னவிதமாக நடைபெற்றன என்பது பற்றியோ அரசாங்கம் இதுவரை ஜனதிபதியிடமோ அல்லது ஜனதிபதி அலுவலகத்திடமோ எந்தவிதமான தகவலும் தெரிவிக்கவில்லையென்று லக்வீம' பத்திரிகை, தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் பிரகாரம் முப்படைகளின் தலைவர் என்ற முறையிலும், நாட்டுத் தலைவர் என்ற ரீதியிலும் ஜனதிபதி செயல்பட்டு வருவதினல் ஜனதிபதிக்குத் தெரியாது இப் பேச்சுக்கள் இடம் பெற்றுள்ளமை அரசியல் துஷ்பிரயோகம் என்று ஜனதிபதி அலுவலகம் கூறியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் முழுவதும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் நடவடிக்கையாக இருப்பதால், இந்தவிடயம் ஜனதிபதிக்கு தெரிவிக்கவேண்டிய அவசியமில்லையென்று பொதுசன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

எப்படியென்ருலும் பேச்சுவார்த்தைகள் முடிவுற்றபின்பு சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிய அறிக்கை ஜனதிபதிஅலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படுமென்று பிரதம மந்திரியின் அலுவலகம் அறிவித்துள்ளது. (ம-சி)

## நமது நோக்கு

### இருட்டில் ஓர் ஒளிக்கீற்று!

பூரண யுத்த நிறுத்தத்தை உடனடியாக அமுல் செய்யும்படி சிறீலங்கா பௌத்த காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

கடந்த தேர்தலில் இனவாதிகளுக்குக் கிடைத்த பலத்த அடியின் பின் அங்குள்ள சில மதக்குழுக்களிடையே புதிய சிந்தனை தோன்றியுள்ளது இருட்டில் ஓர் ஒளிக்கீற்ருகத் தெரிகிறது.

அதிகரித்து வரும் யுத்தச் செலவால் வெளிநாட்டு உதவி வழங்கப்படுவது மறு பரிசீலிக்கப்படுவதும் முதலீடுகள் தடைபடுவதும் மக்களை விழித்தெழச் செய்துள்ளது.

அது மாத்திரமல்ல-தோண்டப்படும் புதைகுழிகளும் படை அணியினரின் சென்ற காலச் செயற்பாட்டின் உண்மைச் சொரூபங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இதேவேளை காமினி திசநாயக்கா வேளைக்கு ஒரு கருத்துக்கூறி வாக்கு வேட்டைக்கு இன உணர்வுகளைத் தூண்டுகிருர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அத்தோடு ஜனநாயக மரபுகளுக்கு அப்பாலும் சென்று வேறு வழிகளால் அதிகாரத்தைக் கைப்பற்றப் போகிருரா என்ற சந்தேகமும் எழுப்பப்படுகின்றது.

ஏனெனில் அவர் ரூபவாஹினியில் நிகழ்த்திய உரை பலவித அரசியல் விமர்சனங்களுக்கு வழி சமைத்துள்ளது.

முப்படைகளை மேலும் பலப்படுத்த வேண்டும் என அவர் கூறுவதன் அர்த்தமென்ன? ராணுவத் தீர்வுக்கு அவர் தூபம் போடுகிருரா?

அது மாத்திரமல்ல-ஜனதிபதிக்குரிய அதிகாரங்களைத் தெளிவாக்கும் நோக்கோடு முப்படைத்தளபதியாக விளங்கும் ஜனதிபதி யுத்தப்பிரகடனம் செய்யும் அதிகாரம் உடையவர் என்பதை நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதன் மூலம் பிரதமருக்கோ அல்லது அமைச்சரவைக்கோ அதிகாரமில்லை என்பதைத் தெளிவாக்குகிருர் ஏற்கனவே மக்கள் ஐக்கிய முன்னணியைச் (M.E.P. சேர்ந்த பேராசிரியர் நளின் சில்வா, குணதாசா அமரசேகரா போன்ருேர் முழுநாட்டையும்போரினல்வென்ற பின்தான் பேச்சுவார்த்தை என்கிருர்கள்.

அப்படியானல் காமினி யார் ஜனதிபதியாக வந்தால் அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்தி இராணுவத் தீர்வைத் தொடரப்போகிருரா?

தோன்றும் ஒளிக்கீற்றை இருட்டு மீண்டும் மறைக்குமா என்பதைத் தேர்தல் முடிவுகாட்டப் போகிறது.

# வடபகுதிக்கு ஒதுக்கப்பட்ட பணத்திலும் பெரும் மோசடி

(கொழும்பு)

வடபகுதி புனர்நிர்மாண வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட பல கோடி ரூபா எவ்விதம் செலவழிக்கப்பட்டது என்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லாமல்இருப்பதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச் சின்சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில்உள்ளபிரதேசங்களில் இந்தப்பணங்கள் செலவிடப்பட்டுள்ளதாக கணக்குக் காட்டப்பட்டுள்ளதாம்.

முன்னைய அரசாங்கத்தின் அதிகாரிகள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளதால் தற்போதைய அரசாங்க அதிகாரிகள்எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியாதுள்ளது என்று 'லக்பீம தெரிவித்துள்ளது.

வடக்கில் புலிகளின் பகுதியில் அபிவிருத்தி வேலைகளுக்கு இவை செலவிடப்பட்டதாக கூறி இப்பணத்திலும் பெரும் மோசடியில் முன்னைய ஆட்சியாளர்கள் ஈடுபட்டிருக்கலாமெனக்கூறப்படுகிறது. ம-சி

### அடுத்தபிரதமர் யார்?

[கொழும்பு]

ஜனதிபதி தேர்தலில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க வெல்லும் பட்சத்தில் யார் பிரதமர் பதவியை வகிப்பது என்பது பற்றிய தீர்மானத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு ஆராயவுள்ளது.

பெரும்பாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவரே தெரிவு செய்யப்படுவார் என்றும், இதுபற்றிய முடிவை மத்திய குழு வெகு விரைவில் எடுக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கே-சி)

# டி. பி. யின் தலைமையின் கீழ் ஐ.தே.க.வில் இயங்கமாட்டேன்

## சஜித் கூறுகிருர்

]கொழும்பு[

ஜனதிபதி விஜயதுங்கவின் தலைமையின்கீழ் ஐ. தே. க. வில் செயற்பட நாங்கள் விரும்பவில்லை என முன்னுள் ஜனதிபதியின் மகனும், ஐ. தே. க. ஹம்பாந்தோட்டை அமைப்பாளருமான சஜித் பிரேமதாஸா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: எதிர்வரும் ஜனதிபதித் தேர்தலில் திரு. காமினி திஸநாயக்காவே வெற்றிபெறுவார். அவர் ஜனதிபதியாக வந்ததும் எனது தகப்பனர் பிரேமதாஸாவின் கொள்கைகளை அமுல்படுத்துவார்.

நான் தவளை போல் இருப்பவனல்ல. ஒரு கட்சியிலிருந்து மற்ருெரு கட்சிக்கு மாறமாட்டேன். ஐ. தே. க. விற்கே எனது சேவையை வழங்கவுள்ளேன். முன்னர் எனது தகப்பனர் ஜனதிபதியாக இருக்கும்போது நான் ஒருபோதும் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடவில்லை எனவும் கூறினர். (சி)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-10-19**
**புதன் இரவு**

08-01 ஸ்ரீ லங்கா அரச பிரதிநிதிகளின் யாழ். வருகை நிகழ்ச்சிகளின் தொகுப்பு- நிகழ்ச்சித் தொகுப்பு சத்யா
08-20 ஏர்முனை தென்னை அபிவிருத்தி உரைச் சித்திரம்.
08-30 செய்திகள்.
08-40 நாடகம் க. சிவராசா எழுதிய ''இது நான் பந்தமா''

**1994-10-20**
**வியாழன் காலை**

07-02 மாவீர வணக்கம்
07-15 விடுதலை கீதங்கள்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

யாழ். மாவட்ட

# சிறுவர் பராமரிப்பு பூங்கா விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரியில் இன்று நடைபெறும் விளையாட்டு விழா நிகழ்விலே கலந்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'எம் மண்ணில் வாழும் அடுத்த தலைமுறை 'இன்றைய' இன நெருக்கடிக்குள் அகப்பட்டு அழிந்து போகாது பாதுகாப்பதற்காகவும், கல்வி போசாக்கு, பண்பு என்பவற்றை முறையே பெற்றுக் கொள்வதற்காகவும் யாழ். மாவட்டத்தில் ஒன்பது சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காக்கள் உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றன. யாழ்.பொம்மைவெளி, நாவற்குழி லவனிதா குடியிருப்பு, சிறுப்பிட்டி, நாவற்குழி, சுன்னகம் தெற்கு, நவாலி, இருபாலை, உடுப்பிட்டி, துன்னலை தெற்கு ஆகிய இடங்களிலுள்ள சிறுவர் போசாக்குப் பராமரிப்புப் பூங்காக்களில் பராமரிக்கப்படுகின்ற ஐந்து வயதுக்குட்பட்ட 1200 க்கு மேற்பட்ட சிருர்களின் உடல் ஆரோக்கியம் வெற்றி தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் பணிவு, திறமை என்பவற்றை வெளிக்கொண்டுவருமுகமாக இச்சிருர்களிற்கு இடையேயான விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2-00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.



சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காக்களின் மாணவர்களில் ஒரு பகுதியினர்.

### பலதும் பத்தும்

**பதிலென்ன?**

ஜனதிபதித் தேர்தல் நெருங்கும்போது இருபக்கமும் கண்டனங்கள்... பல அஸ்திரங்கள்.. பாவிக்கப்படும். சந்திரிகா சார்பாக வீசப்பட்ட இரண்டு கணைகளைக் கேள்வி மூலம் தருகின்றேம். பதில்...? நீங்களே கண்டுபிடியுங்கள்...!

கேள்வி (1) மகாவலித் திட்ட ஊழல்கள் விரைவில் வெளியாகும் என அநுராதபுரத்தில் சந்திரிகா அறிவித்தார். முன்பு... முக்கிய மகாவலி அமைச்சர் யார்?

கேள்வி (2) யாழ். நூல் நிலையம் எரிக்கப்பட்டமை குறித்து விசாரணைக் குழு நியமிக்கப்படலாம். எரிக்கப்பட்ட வேளை... யாழ். நகரில் தங்கியிருந்த முக்கிய மந்திரி யார்?

வழிகாட்டற் குறிப்பு

ஒரு கேள்விக்கு விடை கண்டாற் போதும். மற்றதற்கும் அதே விடை தான்!

—மயூரன்

### அரசின் பேச்சு நேர்மையெனில்

# வடக்கு பொருளாதாரத் தடை முற்றுக நீக்கப்படவேண்டும்

— ஜே. வி. பி. ஜனாதிபதி வேட்பாளர்

(கொழும்பு)

இந்த அரசும் புலிகளுடன் உண்மையாகப் பேசுவதாக இருந்தால் வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை முற்றுக நீக்கவேண்டும். வடக்கிற்கும், தெற்கிற்குமான போக்குவரத்து சேவையைச் சுமுகநிலைக்குக் கொண்டுவர வேண்டும். யுத்த நிறுத்தம் கட்டாயம் அமுல்படுத்தப்பட வேண்டும். இவை யாவும் நிறைவேற்றப்படாமல் நடைபெறும் பேச்சுக்கள் பயனற்றதாகும்.

இவ்வாறு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜே. வி. பி. வேட்பாளரான திரு. நிஹால் கலப்பதி 'சண்டே ரைம்சுக்கு' வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். இப்பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்:

இத்தேர்தலில் நான்வெற்றி பெற்றுப் பதவிக்கு வந்தால் விடுதலைப் புலிகள் உட்பட சகல கைதிகளையும் சிறைகளிலிருந்து விடுதலை செய்வேன் என்றார்.

வடக்கை புலிகளும், ஜே. வி. பி. யினரும் அழித்துவிட்டதாகக் குற்றம் சாட்டப்படுகிறதே என அவரிடம் கேட்டபோது - இது ஜயவர்த்தன அரசாலும், பிரேமதாஸா அரசாலும் விடுக்கப்பட்ட பரளி. நாங்கள் இவ்வாறு செய்யவில்லை என்றார். (சி)

# சமாதானக் காற்று இலங்கையில் வீசுகிறது

— கென்னத் பெர்ணன்டோ

(கொழும்பு)

தென்னாபிரிக்கா மத்திய கிழக்கு, அயர்லாந்து ஆகியவற்றில் வீசிய சமாதானக் காற்று இப்பொழுது இலங்கையிலும்வீசத்தொடங்கியுள்ளது என கொழும்பு மேற்றிராணியார் அதிவணக்கத்துக்குரிய கென்னத் பெர்ணன்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை மறைமாவட்ட சபையின் 50 வது வருடாந்தக் கூட்டத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டின் இனப்பிரச்னையை தீர்த்து வைக்க அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்து வரும் அதே வேளையில் இக்குறிக்கோளினை அடைய ஆக்கபூர்வமான நடவடிக்னககளும் எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். (க)

## இத்தாலியில் இலங்கையர் பலர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து இத்தாலிக்குப் புறப்பட்ட பெருமளவு இலங்கையர்கள் இத்தாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து மத்திய தரைக்கடற் பிராந்தியத்தினூடாக இத்தாலிக்குள் புகமுயன்ற போது இத்தாலிய பொலிசாரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இப்பயணத்திற்காக பெருமளவு பணத்தை ஏஜென்சியிடம் கொடுத்து ஏமாந்து போய்விட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (க-ரி)

### கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

நாளை 20-ம் திகதி வியாழக்கிழமை கொழும்ப செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச்செல்பவர்களையும், இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் அன்று காலை 7-00 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (ரி)

### 9 தென்பகுதி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி மேரி பெர்கின்ஸிடம் முறைப்படி ஒப்படைத்தார்.

இதன்போது கடற்புலிகள் நிர்வாக சேவைபொறுப்பாளர் திரு. மாறன், கடற்புலிகள் அரசியல் பயிற்சி பள்ளி பொறுப்பாளர் திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதனும்சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தை சேர்ந்த செல்வி நட்ஷாவும் கலந்து கொண்டனர்.

விடுவிக்கப்பட்ட 9 மீனவர்களின் விபரம் வருமாறு:

பி. ரி. சிறிபாலா ஜெயபோதிபாரா கந்தறை, எச். டபிள்யூ நாமல் நிலந்த, நெல்சன்புர, திருமலை, எ. அமிர்ந்தசில்வா, கட்டுவபிட்டிய நீர்கொழும்பு, டபிள்யூ. மக்ஸி, கொச்சிக்கடை கட்டு, நீர்கொழும்பு, டபிள்யூ. றஞ்சித்பெரேரா, கண்டக்குளி, கற்பிட்டி, ஜோசப் ஈபெத் பாலாவக்சுரம்பை, புத்தளம்' கே. ஜீ. கருணரத்ன சினவராய, திருமலை, டபிள்யூ ஸ்ரான்லி கொச்சிகடை, நீர்கொழும்பு.

மேற்படிமீனவர்களில் பலர் கற்பிட்டி கடற்பகுதியில் 8ம் திகதி 5ம் திகதிகளில் புலிகளிடம் சிக்கி அவர்களினல் தடுத்து வைக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. சி-ரி

### ஜனாதிபதி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கட்டப் பேச்சுவார்த்தையில் பிரதமர் சந்திரிகா தலைவர் பிரபாகரன் ஆகியோர் சந்திப்புக் குறித்தும் ஆராயப்படலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-ரி)

### புலிகள் எம்மை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நான் ஏற்கனவே நோய் வாய்ப்பட்டிருந்தேன். எனது உடலில்ஏற்பட்ட கோளாறை நிவர்த்திக்க சந்திரசிகிச்சை செய்ய பல ஆயிரம் ரூபா தேவை என டாக்டர்கள் கூறியிருந்தும் நான் குடும்ப நிலைகாரணமாக கடற்றொழிலுக்கு சென்றேன். அப்போதே புலிகளிடம் பிடிபட்டேன்.

யாழ்ப்பபணத்திலிருந்த போது எனது சுகயீனத்தை அறிந்து அவர்கள் எனக்காக பல ஆயிரம் ரூபா செலவு செய்து 3 சத்திர சிகிச்சைகளை செய்ய உதவினுர்கள். இதனை எனது வாழ்நாள் முழுக்க நானும் எனது குடும்பத்தவரும் மறக்கமாட்டோம் வறுமைநிலையில் இருந்தநான் இவர்களிடம் பிடிபட்டது கூட ஒரு தெய்வச் செயலென்றே கருதுகிறேன்.

நல்ல உடல் நிலையில் இலங்கைப் படையினரிடம் பிடிபடும் தமிழர்கள் விடுபடும் போது நோயாளியாக விடுவிக்கப்படும்போது புலிகளிடம் பிடிபட்ட நான் சுகதேகியாக புலிகளிடமிருந்து விடுபடுகிறேன். அவர்கள் மக்களுக்காகவே தமது உயிரைக் கொடுத்துப் போராடுகிறார்கள் என்பதை இதன் மூலம் அறிந்தேன்.

என்னுடன் இருந்த சக மீனவர்கள் கூட இவர்களால் மிகவும் சிறப்பாகவே பராமரிக்கப்பட்டனர். எம்மைப் பராமரித்த 'மீனவ நண்பர் கழகம்' எமக்குச் செய்த சேவைகளை நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம் எனவும் கூறினர். (க-ரி)

### அரசு புலிகளை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

குழுத் தலைவர் திரு. பாலபத்த பென்டி, 18 விடுதலைப் புலிகளை அரசு விடுதலை செய்யவுள்ளதாகவும், இவர்கள் அனைவரும் கொழும்பிலிருந்து ஹெலி மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு, புலிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள் எனவும் கூறினர்.

அவரிடம், விடுதலை செய்யப்படவுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலைத் தருமாறு நாம் கேட்டோம். அவர்கள் விடுவிக்கப்படும்போது பெயர்ப் பட்டியல் தரப்படும் என்று அவர் கூறினர். பின்னர் இது பற்றி ஐ. சி. ஆர். சி. யிடம் நாம் கேட்டபோது, விடுதலை செய்யப்படவுள்ள அனைவரும் பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் எனக் கூறி, 18 மீனவர்களின் பெயரையே அவர்கள் எமக்குத் தந்தார்கள். உண்மையில் விடுவிக்கப்பட்டவர்கள் யார் என்பது தற்போது எல்லோருக்கும் தெரியும்.

அரசு பொய்ப் பிரசாரம் செய்ததன் மூலம், மக்கள் மத்தியில் ஓர் அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதேபோல்தான் ஏனைய அறிவிப்புக்களும் பொய்யானதாக இருக்குமோ என எண்ணத் தோன்றுகின்றது.

அரசு 18 மீனவர்களை விடுவித்ததற்குப் பதிலாக, நாமும் 9 மீனவர்களை விடுவித்துள்ளோம். பேச்சுக்கள் நடக்கும் போது, அரசு தனது செய்திகளை மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் விதத்தில் வெளியிட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம் எனவும் கூறினர். (சி-ரி)

### கைதிகள்

(1-ம் பககத்தொடர்ச்சி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்த போது அதன்யாழ். மாவட்ட வதிவிடப்பிரதி செல்வி மேரி பேர்கின்ஸ் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்; நாம் எமது நடுநிலை கொள்கையால் வடக்கில் புலிகளையும் தெற்கில் அரசு தரப்பினரையும் சந்தித்து சில பிரச்னைகள் குறித்து பேசுகிறோம். ஆனல் இருதரப்பும் நடாத்தும் பேச்சுக்களில் நாங்கள் பங்குபற்றுவதில்லை.

முக்கியமாக போர்க்கால சூழ்நிலைகளில் சிறைக்கைதியாக பிடிபடுபவர்கள் மீது துன்புறுத்தல்கள்நடைபெறும் போது சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்க நாம் தயங்குவதில்லை. துன்புறுத்தல்கள் உலகின் எந்தப் பாகத்தில் நடந்தாலும் அதனைகண்டிக்கிறோம். தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் ஒவ்வொரு தனி மனிதனும் சுதந்திரமான நடமாட்டத்தையே விரும்புகின்றன். அதற்கு எம்மாலான உதவியை செய்வோம்.

போரின் போது ஒரு பகுதியினர் தாங்கள் பிடித்தவர்களை துன்புறுத்தும் போது மறுதரப்பும் அவ்வாறு செய்யாது மனிதாபிமானத்தோடு நடாத்த வேண்டும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கைது செய்யப்பட்டவர்களின் மனிதாபிமான பராமரிப்பையே முக்கியமாக கருதுகிறது. மனிதாபிமான அடிப்படையில் இருதரப்பும் நடந்தால் இவற்றையெல்லாம் தவிர்க்கலாம் எனவும் கூறினர். சி-ரி

### படையினரிடமும்

## வாக்கு வேட்டைக்கு காமினி குறுக்குவழியாம்

(கொழும்பு)

முப்படைகளிலும் கடமையாற்றுபவர்களிடம் இருந்து ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகள் பெறுவதற்கு, காமினி திசநாயக்கா குறுக்குவழியில் திட்டமிட்டுள்ளார் என்று 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஊழல், துஷ்பிரயோகம் புரிந்து விசாரணைக்கு உட்பட்டுள்ள படையினருக்கும், பொலிஸாருக்கும் எதிராகத் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தாம் பதவிக்கு வந்தால், இவர்களுக்கு எதிராக எந்த விதமான விசாரணையும் மேற்கொள்ளப்படமாட்டாது என்றும், கடிதம் மூலம் படையினருக்கும், பொலிசாருக்கும் அறிவித்தல்களைக் காமினி திசநாயக்கா அனுப்பி வைக்க இருப்பதாகவும் 'ஹிரு' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ம-சி)

### ஜனாதிபதித் தேர்தலில் தோற்றால்

## ஐ.தே.க.விலிருந்து காமினி ஓரங்கட்டப்படலாம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் திரு. காமினி திசநாயக்கா தோல்வியடைந்தால் அவரை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஓரங்கட்டுவதற்கு காமினி திசநாயக்காவுக்கு எதிரானவர்கள் திட்டம் வகுத்துள்ளனர் என்று 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள இருவர் ஜனாதிபதிதேர்தலில் போட்டியிடுவதால் பெரும்பாலும் காமினி திசநாயக்கா கூடுதலான வாக்குகள் பெறும் இடத்திலில்லை என்று தெரிவிக்கபபடுகிறது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐ. தே. கட்சிக்கு விழுந்த வாக்குகளில் $\frac{3}{4}$ பகுதியைத்தானும் காமினி திசநாயக்கா பெறமாட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல பேர் காமினி திசநாயக்காவுக்கு எதிராகவே செயல்பட்டு வருகின்றார்கள் என்றும் 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது. (ம-சி)

### ஹேமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது ஜனாதிபதித் தேர்தலில் காமினி திசநாயக்காவுக்கு ஆதரவாக அவர் செயற்பட்டு வருகின்றார். காமினி திசநாயக்கா யார்? அவர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் எதிரியாவர் என்றார். (ம-ரி)

### பிரதமரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் பயன்படுத்தவில்லையெனவும் பிரதமர் பி. பி. சி. சிங்கள சேவை சந்தேசியாவுக்கு மேலும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் சந்தேசியாவுக்கு மேலும் தெரிவித்ததாவது.

அரச ஊழியர்களுக்கு உரித்தான லீவுகளை எனக்கும் எடுக்க முடியும் இதனைப் பயன்படுத்தியே நான் சிங்கப்பூர் சென்றேன். அரசும் வேறு எவரும் இதுபற்றி கேட்க முடியாது.

நாட்டை விட்டு வெளியேறுமுன்தான் முறைப்படி ஜனாதிபதிக்கு அறிவித்துவிட்டே சென்றேன்.

பத்திரிகைகளுக்கு இந்த நாட்டில் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. பத்திரிகைகள் அதனை உரிய விதத்தில் பயன்படுத்த வேண்டும் என்றார். - இ

### 2-ம் கட்ட

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

போர்நிறுத்தம், பாதைதிறப்பு சம்பந்தமான விடயங்களுக்கு இந்தப் பேச்சுவார்த்தையின் போது ஒரு முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான முதலாவது கட்டப் பேச்சுவார்த்தைகள் கடந்த 13-ம், 14-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது தெரிந்ததே.

### பூஸா தடுப்பு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ரூர் அவர்.

களுத்துறைத் தடுப்பு முகாமிலும் தற்போது 75 கைதிகளை தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினர். இதேவேளை தடுப்புக் காவலில் இருக்கும் தண்டப் பணம் செலுத்தமுடியாத கைதிகளும் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி-ரி)

### சமாதான

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

போன்ற தமிழ்ப் பத்திரிகைகளும், திவயின, தினமின மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் உட்படப் பல பத்திரிகைகள் இவ்வாறு செய்திகளை வெளியிட்டுள்ளன.

இலங்கை வானொலி, ரூபவாஹினிச் செய்திகளிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. கே-ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/Ꮽ.**